# குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 21 — 4 — 59 செவ்வாய் | இசை: 46


## வருக நேருவே!

வருக நேருவே வருக வருக
பெருகு தமிழர்க்குப் பெரும்பகை நீவிர்;
வரவேற்க வேண்டும்; மறுப்பது சரியன்று!

வருக நேருவே வருக! நீவிர்
அரசியல் ஒழுக்கம் அடைந்த துண்டோ?
உலகின் அரசியல் உணர்ந்த துண்டோ?
பதவி யாளர்க் குள்ளபண் பாடுகள்
உம்மிடம் உண்டா? உலகின் பொதுவறம்
உம்மிடம் உண்டா? செம்மையாய் எண்ணினல்
இல்லை, எதுவும் இல்லை என்பதே
என்றன் எண்ணம் ஆகும்! கேட்பீர்:-

ஓரி னத்தின் உயிரே ஆன
ஒருதனித் தொன்மொழி ஆன தமிழை
அழிக்க முடியுமா? அழிக்க எண்ணும்
எண்ணம் அறமா? இந்த உலகில்
இம்மனப் பான்மையை எந்தத் தலைவர்பால்
கண்டீர்! காட்ட முடியுமா உம்மால்?
என்னதி கார எல்லையின் ஒருமொழி
வளர்ந்தால் என்றன் பதவியும் வளரும்
என்றுதாம் எண்ணுவர் எந்தத் தலைவரும்!

தொடர் கடைசிப்பக்கம்



புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௯௦ சித்திரை ௮

# தொன்மை ஆராய்ச்சி II

சொற்களுக்கு முதலில் ஒகரம் வருவதென்பது பிற்பட்ட வழக்கம். சொற்களின் முதலில் உகரம் வருவதென்பது அதற்கு முற்பட்ட வழக்கம் என்பதை மேற்காட்டிய எடுத்துக்காட்டால் மனதிற் பதியவைத்துக் கொள்க. இதன் வழியாய்த் தொலைதல் என்னும் சொல்லுக்கு முன்னரேயே துலைதல் என்றுதான் இருந்திருக்க வேண்டும்.

எனவே, துலைதல் தானே ''தொன்மை'' என்பதற்குப் பிறப்பிடம்? - ஆதலால் துலைதல் என்னும் சொல்லின் வரலாற்றையும் இங்கே ஆராய்வோம்.

துலை என்றால் சேய்மைக்கண் செல் என்பது பொருள். துலை துழ முதலிய சொற்கள் எந்தச் சொல்லினின்று வந்தன? - அந்தச்சொல் தான் ''உலவு'' என்பது. இதை விளக்குவோம்.

உலவு, உலாவு, உழல், உலை, உல என்ற சொற்களைக் காணும்போது சிறிது சிறிது பொருள் வேறுபாடு தோன்றினாலும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளது என்பதை மறக்கவியலாது. இந்த நினைவோடு அடியில் வரும் சொற்கூட்டத்தை ஆராய்க.

உலவு, உலாவு, உலா-ஞ்சு, உழ-ல், உலை உல.

குல-வு, குலா-வு, குழை, குலை
சுல-வு, சுலா-வு, சுழல், சுற்று
துழ, துழ-வு, துழாவு, துலை, துலா.

இச்சொற்கள் எல்லாவற்றிற்கும் அடிப்பொருளை ஆராயுங்கால் அது உள் என்பதேயாகும். சென்றுகொண்டிருப்போன் ஒருவனை நோக்கி உள்ளால்வருக என்றால், அவன் உள் நோக்கி வரும்போது அவனை உழலுகின்றான் என்கின்றோம். அந்த உழலல் என்பதன் அடிப் பொருள் உள் என்பதன்றோ !

எனவே, உள் என்பது இச் சொற்களின் அடிப்படைச் சொல் என்க.

தமிழ்ச் சொற்களின் அடிப் பொருள் எல்லாம் அண்மை, சேய்மை, முதலான உள்ளக் கிடக்கைகளைச் சுட்டுவனவாம். அதுவுமின்றி இது சிறப்பியல்பைச் சுட்டிற்று. இது சார்பு பற்றி விரிந்தது. இது இயைபுடைமையால் வந்தது. இது எதிர் நிலையால் வந்தது, இது வழக்காறு அழிந்ததால் வந்தது - என்று அறிவதால் சொல்லாராய்ச்சி தெளிவு படும் வகையில் ஒன்று தான் உள் என்பதும். இந்த உள் என்பதினின்றுதான் உலவு முதலிய முதல் வரிச் சொற்கள் வந்தன என்க; மேலும் விரித்து வருதலையும் எடுத்து விளக்குவோம்.

<★>

## எழுதுவார்க்கு....

குயிலுக்குக் கட்டுரையோ கவிதையோ எழுதுகின்றவர் அத்துடன் தன் முழு முகவரி எழுதுவதோடு-குயிலுக்குரிய தம் சந்தா எண் அல்லது குயில் விற்பனையாளரிடமிருந்து, குயில் வாங்குவதைக் காட்டும் நற்சான்று குறித்து அனுப்பக் கோருகின்றோம்

அப்படி இல்லாத செய்திகள் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

# வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

## அவிசு

அவிசு, அவிது, அவிதல் ஒரே பொருளில் அமைந்த தொழிற் பெயர்கள். சு, து, தல் தொழிற்பெயர் இறுதிநிலைகள். வேகவைத்தல் என்பது பொருள். இது அவி என முதனிலைத் தொழிற் பெயராகவே நிற்பதும் உண்டு.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

என்ற குறட்பாவில் நோக்குக.

அவிசு, அவிது அவிதல் அவி இவை தொழிலாகுபெயராய் அவிக்கப்போகும் ஆடு மாடுகளின் தசையையும், அவித்த அதாவது வெண்ணெயை அவித்த – வேகவைத்த – காய்ச்சிய நெய்யையும் குறிக்கும்.

வேள்வியின் பேரால், ஆடு மாடுகளைத் தீயிலிட்டு வேகவைத்துத் தின்னும் ஆரியர் இத்தமிழ்ச்சொல்லை எடுத்தாண்டனர். அவர் அவிஸ் என வாயாடுவர்.

எனவே அவி, அவிசு தூய தமிழ்க்காரணப் பெயர்கள்.

★ ★ ★

## அவை, சவை

அவை என்னும் தூய தமிழ்க் காரணப் பெயர். ஆரியரால் சவை, சபை, சபா என்றெல்லாம் வாயாட்டுப் பெற்றது. பெறவே இடைக் காலத்தில் அவைவேறு; சவைவேறு என்று ஆக்கப்பட்டது.

அவை; சவை குழாம்விற் பங்நர்
அஃறிணைப் பன்மைச் சுட்டாம்
சவைவீடு, அம்பலம் தக்கோரின்
சமூகம்பண் டிதன்சூது என்ப

என்னும் நாநார்த்த தீபிகை (கூ௰உ) யிற்காண்க

அவ்வுதல் என்பதும் அவ்வை என்பதும் தொழிற்பெயர்களே. அழுந்துதல் வீழ்தல் என்பன இவற்றின்பொருள். மனம் நன்னெறிக் கண் அழுந்துதல், வீழ்தல் என்று பொருள் கொள்க. வீழ்தல் - மனஞ்செலுத்தல் மனம் ஆழ்தல் என்க.

வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அணி

என்ற குறட்பாவில் நோக்குக.

அவ்வை என்பது வகரத் தொகுத்தல் பெற்று அவை என ஆயிற்று.

எனவே அவை தூய தமிழ்க்காரணப் பெயராதல் காண்க.

இனி அவையினின்று தோன்றிய சவை சபை சபா என்பன தமிழ் வேர்ச்சொல் பெற்றவையேனும் அவைகளைத் தமிழர் எடுத்தாளல் சிறப்பன்று. சவையை எடுத்தாளுவதில் குறைவு இன்று.

சங்கமே கணைக்கால் ஓரம்
சவை சங்கு புலவர் நெற்றி

என்ற நிகண்டாசிரியர் சவை என்பதை எடுத்தாளல் நோக்குக.

---


## விற்பனையாளர்க்கு...

புட்டியல் பாக்கியை உடனடியாக அனுப்புமாறு பலமுறை அறிவித்தும் இதுவரை அனுப்பாதிருக்கும் விற்பனையாளர்கள் இம்மாத முடிவுக்குள் அத்தொகையை அனுப்பிவிட வேண்டும். அப்படி அனுப்பாதவர்கள்மேல் வழக்குமன்றம் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



## கட்டண விவரம்

| கட்டணம் | உள்நாடு | வெளிநாடு. |
|---|---|---|
| தனி இதழ் | 13 காசு | 16 காசு |
| ஓராண்டு | ரூ. 6—75, | ரூ. 8—50, |
| ஆறு மாதம் | ரூ. 3—37. | ரூ. 4—50. |
| வாழ்நாள் | ரூ. 100. | |

தனி இதழ் வேண்டுவோர் பதினைந்துகாசு ( 0–15 ) அஞ்சல் தலைகள் அனுப்புக.

# குழிதோண்டிப் புதைத்திடு

த. சீதாராமன். விருத்தாசலம்.

எடுப்பு

எழுநீ எழுநீ இன்றே - நம்தமிழ்
ஒழிப்பவர் அழிந்திட நன்றே!

தொடுப்பு

குழிதோண்டிப் புதைத்திடு பகைவரின் கூட்டைக்
குன்றென நிமிர்ந்திடு காத்திட நாட்டை!

அடிகள்

தமிழுண்டே வாழ்வுண்டே எமக்கென்று [சொன்னல்
தறுதலை இந்திப்பேய் வருவதேன் முன்னல்!
உமியென்றே நம்மையே ஊதிட ஒண்ணுமோ?
உயர்த்திடில் கைகளை மண்ணுவர் திண்ணமே!

(எழுநீ)

அஞ்சலோடு-ஆகாச வாணியிலும் இந்தி
ஆதிக்கம் செலுத்தவோ ஆட்சியில் குந்தி!
பிஞ்சியிலே பழுத்திடில் வெம்பல் அல்லவோ?
நஞ்சென்றே இங்கதை நறுக்கிடு! தமிழாள

(எழுநீ)

அமுதமாம் செந்தமிழ் எம்மவர் கண்கள்!
அதற்கொரு தீங்கெனில் உறங்கிடோம் நாங்கள்!
அருந்தமிழ் வேந்தரெம் வெண்தாடிப் பெரியார்
அமைத்திடு படையினில் முன்னவன் என்றே

(எழுநீ)

<✱>

# குறள்நெறி நிற்போம்

செ. கிருட்டினசாமி, அரக்கோணம்.

மூவர் வளர்த்த முத்தமிழ் மொழியில்
தேவர் வாழ்வைத் துறைமுப் பாலால்
தெளிய வைக்கத் தேன்குறள் என்னும்
ஒளிநூல் தந்தே உலகம் வியக்க
இரண்டு வரிக்கீழ் எத்தனை யோபொருள்
நிறம்ப வைத்த நிகரிலா மேதை!
வாழ்வுக் கோர்நல் லிலக்கணம் வகுத்து,
தாழ்வினை நீக்கத் தனிவழிச் சொன்னவன்!
அணிமிகு நாட்டிற் கைந்தினைக் கூறியும்,
பணிமொழி யார்தம் பண்பினைப் போற்றியோன்!
எண்ணுவ தெல்லாம் உயர்வே எண்ணவும்,
எண்ணிய தெய்த திண்ணிய ராகவும்,
வானும், கடலும் வையமும் தோற்கும்,
மானப் பொருள்பல மாண்புறச் செப்பினன்!
ஈன்ருள் பெரிதும் இன்புற வாழ்ந்தவன்!
தோன்றினன் புகழொடு தொன்மொழிச் செல்வன்!
செந்நாப் புலவன்! தென்புல மேரு!
சிந்தனைச் சோலை! இலக்கிய தீபம்!
தமிழ்மறை ஈதே! தமிழ்மறை ஈதே!
அமிழ்தென உண்போம்! அன்பறம் காப்போம்!
இருள்நீங் கிடவே யாவரும்,
குறள்நெறி நிற்போம்! குவலயம் வெல்லவே!

# கொட்டடா முரசு!

– சிங்கை, கோ. இரா. வெற்றிவேல். –

கொட்டடா முரசு — இந்தக்
குவலயம் வியக்க வாழ்ந்தவர் நாமென்று

(கொ)

அயலவர் நம்மை ஆண்டது போதும்
ஆட்பட மாட்டோம் இனிஒரு போதும்
புயலெனச் சீறிப் பொங்கி யெழுந்து
புதுநிலை காண்போம் பகையினை வென்று

(கொ)

புலியென வாழ்ந்து புகழ்கண்ட தமிழர்
எலியென நலிதல் இழிநிலை யன்ருே!
வலிவுள்ள மக்களே வாழ்வ ராதலால்
துளியும் அயர்வின்றித் தோள்தட்டிப் புறப்படு!

(கொ)

தெள்ளு தமிழும் தீஞ்சுவைக் குறளும்
அள்ளக் குறையா தருந்தமிழ்ச் செல்வம்
மெல்லப் புகுத்தும் இந்தியின் வாலை
அறுக்க முனைவதே உன்முதல் வேலை!

(கொ)

சாதி சமயச் சழக்குகள் மாய்ந்து
சரிநிகர் மக்கள் எனும்நிலை வாய்க்க
சீரிய பெரியார் சொல்வழி நின்று
செயல்பட்டால் வாழ்வு நிச்சய முண்டு!

(கொ)

# அடிச்சுவடு

உள்ளிக்கோட்டை, "புனலன்"

திறல்நிறைந்த தமிழகத்தான்
திசைநிறைந்த புகழுடையான்
வரலா றென்னும்
துறைநிறைந்த பெருங்குலத்தான்
தொகைநிறைந்த துணையுடையான்
சிங்கம் போல
விறல்நிறைந்த வலிவுடையான்
வெறிநிறைந்த உணர்வுடையான்
விசைகுன் றிப்போய்
குறைநிறைந்து வாழ்கின்றான்:
குடிநிறைந்த தொகையிருந்தும்
பயன்தான் உண்டா?

தொலைகடந்தும், எங்கெங்கோ
துறைகடந்தும், மலைகடந்தும்,
துடித்துச் சீறும்
அலைகடந்தும், பெருநதிகள்
அணைகடந்தும்; வென்ற இனம்
அல்ல வாநாம்?
கலைகடந்து பேரறிவுக்
கரைகடந்து வாழ்ந்தவர்தாம்!
ஆனால், இன்றோ
நிலைகடந்து, தமிழினத்தின்
நெறிகடந்து நிற்கின்றோம்:
நினைத்துப் பார்ப்போம்!

விண்படித்த பெருநிலவை
வெறிபடிந்த மேல்நாட்டார்
எட்டு கின்றார்:
புண்படிந்த நெஞ்சோடு
புகைபடிந்த நினைவோடு
புழுத்துச் செத்தோம்.
மண்படிந்த புழுக்கள்நாம்:
மரம்படிந்த அட்டைகள்நாம்:
மனித ராநாம்?
பண்படிந்த நம்தமிழைப்
பகைபடிந்த நெஞ்சத்தார்
பழித்தே தீர்வார்!

'குறள்கண்ட தமிழ்வாழ்க!
கொடிகண்ட நிலம்வாழ்க!
பகைவர் ஓடப்
புறம்கண்ட இனம்வாழ்க
புகழ்கண்டோர் வாழ்க'-என்றே
போற்றிப் போற்றித்
திறம்கண்ட பழம்புகழைத்
திசைகண்ட எல்லைவரைப்
பேசித் தீர்த்தோம்!
அறம்கண்ட தமிழகத்தான்
அழக்கண்ட வையத்தார்
பழித்தல் கண்டோம்!

அணுக்காட்டிப் பிறைஎட்டி,
அறிவெல்லைத் திறம்காட்டி
அருமை யான
பணிகாட்டிப் பகைவர்க்குப்
பயம்காட்டி வாழ்கின்றார்
மேலை நாட்டார்!
பிணம்காட்டி அழுகின்றோம்:
பிறைகாட்டித் தொழுகின்றோம்
இராகு காலக்
குணம்காட்டி, எமகண்டக்
குறிகாட்டிப் பஞ்சாங்கம்
கொள்கின் றோம், நாம்!

குறைசொல்லி நல்லோரைக்
கொடுஞ்சொல்லில் இகழ்கின்றோம்
மற்ற வர்க்கே
மறைசொல்லி, உலகத்தின்
மனம்சொல்லி, 'ஏதோ'நாம்
வாழு கின்றோம்.
நிறைசொல்லிப் பெருவாழ்வு
நெறிசொல்லித், தமிழகத்தான்
நிமிர்ந்து வாழும்
துறைசொல்லிப் புகழ்முகட்டைத்
தொடச்சொல்லும் திசைநோக்கி
எழுக இன்றே!

பிழைகொண்ட நெஞ்சத்தார்
பிணிகொண்டு மாளட்டும்!
பிறர்கால் நத்தும்
பழிகொண்ட கீழ்மக்கள்
பசிகொண்டு சாகட்டும்!
இனத்தைத் தூற்றும்
வழிகொண்ட நாய்போன்றார்
வதைகொண்டு வேகட்டும்!
இரத்தம் போலும்
தழல்கொண்ட செந்நெருப்பில்
தமிழ்கொல்லும் இழிமக்கள்
எரிக மன்னோ.

குகைகிளம்பும் சிங்கமெனக்
குரல்கிளப்பி, நடைகிளப்பித்
தமிழ பூிக்கப்
பகைகிளம்பும் இடம்நோக்கிப்
படைகிளப்பிச் செல்க!வெல்க!
பலப்பல் கோடித்
தொகைகிளம்பி, பகைநம்மைத்
தொழக்கிளம்பச் செய்கஇன்றே!
புதுமை காணும்
வகைகிளம்பி, அறிவெல்லை
வரைகிளம்பி, நல்வாழ்வு
வாழ்க நன்றே!

# காவிரிக் காட்சி

மணமேடு, க. குருநாதன்

பூவிரிந் ததனால் இஃது
காவிரி என்றார். அந்தக்
காவிரிப் புனலால் பொன்போல்,
கதிரெலாம் கொழிக்கக் கண்டு
கூவுபேர் பொன்னி அந்தக்
கண்ணை வியப்பால் நோக்கி
'ஆ'வெனப் பிளக்க வாய்கள்
ஆரிடம் உள்ள திங்கே?

பொன்னியின் கரையி லெங்கும்
பொதிந்துள்ள மணலின் செல்வம்,
எண்ணரும் படுக்கை போலும்!
இன்பத்தின் இருக்கை போலும்!
கண்ணுக்கோர் இயற்கைக் காட்சி,
கிடத்தற்கோர் மணலின் மெத்தை,
பொன்னியின் இடத்தில் உள்ள
போதினில் இன்பம் தானே?

எண்ணங்கள் கலங்கிச் சென்றால்
இன்பத்தை அளிக்க அங்கே
வண்ணங்கள், மணற்ப ரப்பு,
வான்பற வைகள், மீன்கள்.
தென்றலின் வீச்சு, வெய்யோன்
தீட்டிடும் ஓவி யங்கள்,
தென்புகழ் நாட்டும் செய்கை
துய்யதாய் உண்டு! கண்டேன்!

செங்கதிர் ஆட்டத் தாலே,
செறிவளத் தோட்டம் மின்னும்!
பொங்குநீர் ஓட்டத் தாலே,
பூம்பொழிற் கூட்டம் வாழும்!
எங்கணும் இவைகள் காட்சி
ஈதலால் எண்ணக் கோவை
இன்கவித் தோழி யோடே
இன்பமாய்க் கலந்து போகும்!

இலக்கணக் கரையின் உள்ளே
இயங்கிடும் கவியைப் போல,
நிலக்கரை இரண்டுண் டாக்கி
நீள்கின்ற பொன்னிப் பெண்ணாள்
வலத்துயர் பரிதி தன்னால்
விரிவுறச் சிவந்து தோன்றி,
நலக்கண வன்கை பட்ட
நங்கையின் கன்னம் காட்டும்!

ஆற்றிடைத் திட்டி ருக்கும்
அசையாத ஓடம் போலே!
ஏற்றியப் படகில் உன்னை
இறக்கினால் மீளு தற்கு
மாற்றுத்தான் வேண்டும் தம்பி,
மற்றென்ன? இதனை நன்கு
போற்றியே அணுகா உள்ளம்
பூத்திடா உள்ளம் தானே?

கூடுபோய் அடையப் புட்கள்
கூட்டமாய்ப் பறக்கும் நேரம்,
காடுள்ள கரைகள் நீரைக்
காட்டியே அனைந்த கோலம்,
ஓடுநீர் நிலையில் பைய
ஊர்ந்தாடிச் செல்லும் ஓடம்,
கேடுகள் நீக்கி நம்மைக்
கிளைத்திடச் செய்யும் தம்பி!

<+>

கருத்துக் குவியல்! சுவைப்பெட்டகம்!
கலை விருந்து!

தமிழ் முரசு

பாரதிதாசன் சிறப்பிதழ்
ஏப்ரல் 29-ந்தேதி பாவேந்தர் பாரதிதாசன்
பிறந்தநாள் விழாவையொட்டி
வெளிவரும்!

தமிழக முதலமைச்சர் காமராசர், தந்தை பெரியார், ஆகியோரின் சிறப்புரையும், ஆதித்தனார், கோவை அய்யாமுத்து தேவநேயப்பாவாணர், பாவலர் பாலசுந்தரம் போன்றாரின் கருத்துரையும் மற்றும் அரிய கட்டுரைகளும், இதழை அணிசெய்கின்றன.

புதுவைக் கவிஞர்களின் கவியரங்கு
புதுமையான பகுதி!
அதிகபக்கங்கள் — விலை 25 புதுக்காசு
தேவைக்கு உடனே பதிவு செய்துகொள்க!
தமிழ் முரசு அலுவலகம்
- புதுச்சேரி -

# கவிஞர் இளநாகனரின் நாவன்மை!

-: சைதை, ஓடையான். :-

குடிமக்கள் வாழ்வில் இன்னற்
குறைகளைப் போக்கு தற்கே!
முடியினைத் தாங்கி மன்னர்
வையத்தில் அரசை ஏற்றுர்!
கொடியவர் தொல்லை நீக்கிப்
படையமைச் சரணும் வேண்டிக்
குடிவரிப் பெறுதல் நன்றே!
கொற்றவன் பாண்டி மாறன்;

அளவின்றிப் படைகள் சேர்த்தே
அநீதியாய் வரிகள் கேட்டான்
இளநாக னுரோ நொந்தார்;
அரசனை நேரிற் கண்டார்!
"இளகிய உள்ளம் கொண்ட
அன்புடை அரசே மாற
வளவன்நீ அறிவேன் யானும்
மக்களைக் காத்தற் கோநீ!

மன்னனே அன்றி வீணே!
வெம்படை சேர்த்தற் கல்ல!
என்பதை அறிந்தி டாமல்
அவர்துயர் களைந்தி டாமல்
வன்னெஞ்சங் கொண்டாய். மக்கள்
வறியராய் துன்புற் றுள்ளார்
அன்னவர் துணையொ ழிந்தால்
உன்படை என்ன ஆகும்?

பக்குவம் அறிந்தி டாமற்
படைதனைப் பெருக்கு கின்றாய்!
மக்களை வாட்டு கின்றாய்;
மன்னர்க்கி தழகோ சொல்வாய்?
முக்கியம் மக்கள் வாழ்வே;
மன்னநீ அறிந்தி டாமல்
மக்களை எதிரி யாக்கி
வரிபெற்றால் வாழ்வா யோநீ?

நீதியை அழிப்போர் வாழ்வை
ஞாயிறுய்த் தீய்ப்போன் மன்னன்!
கோதிலா மக்கள் வாழ்வைக்
குளிர்மதிக் குணத்தால் காத்து

மேதினி பொழியும் வள்ளல்
மழைக்குணம் உடையோன் மன்னன்!
தீதினை யொழித்து மக்கள்
துணைபெற்றே ஆள்வோன் மன்னன்"

கவிஞரின் உரையைக் கேட்டுக்
கொற்றவன் மனந்தி ருந்தி
"அவக்குணம் கொண்ட வென்னை
அறிஞரே மன்னிப் பீர்கள்
எவர்க்கும்நான் தீங்கு செய்யேன்
உண்மையும் தெரிந்தேன்" என்று
கவிஞர்க்கு வாழ்த்துச் சொன்னான்
குடிகளும் மகிழ்ந்திட் டாரே!

(புறம் ருரு)

★—★

# ஆரியன் ஏட்டை அல்ல!

ப, பாலகிருட்டினன், மன்னம்பாடி.

வானநூல் சொல்லி வையம்
வாழ்ந்திடுங் கதையைச் சொல்லி,
ஆனநற் கருத்தால் வாழ்வை
அழகாக்க வழியைச் சொல்லி,
மானத்தைச் சொல்லிக் கொண்ட
மரபினைக் காட்டி, அன்பு
ஞானத்தை! ஆக்கந் தன்னை
நாட்டிலே நடத்த லாலே-

"காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்" என்று
சீரிய கருத்திற் கெல்லாம்
செவியினைத் திறந்து காட்டும்
நேரிய இதழ்ப்பெண் ணுனை
நேற்றுநம் கவிஞர் சொன்னார்!
ஆரிய ஏட்டை அல்ல!
அவரடி ஏட்டை யல்ல!

தெற்கினை வடநாட் டார்கள்
தேய்க்கின்றார் என்று சொன்னால்;
முற்றிலும் தவறே என்பான்!
முன்னேற்றம் தெற்கி லென்று
பற்பல படங்க ளோடு
பார்ப்பனன் இதழைப் போட்டு
விற்பனை செய்வான்! இங்கு
வீரர்க்குள் குழப்பம் செய்வான்!

<+>

# கலியபெருமாள் எழுந்தருளிய பெரமலூர் பெற்றபேறு!

பெரமலூர் என்பது கலிய பெருமாள்
திருக்கோ யில்கொண் டிருக்கும் திருவிடம்.

★ ★ ★

ஆண்டு தோறும் விழாவரும். அதனில்
ஆண்டவன், கோழிமீன் அரிசிநெல்
கீரை கிழங்குமுதல் கீழென்று மேலென்று
பாராது பெற்றுப் பார்ப்பனர்க் கருளுவான்.
விழாவில் ஆண்டு வருமானம் எண்ணிஞல்
ஐந்திலக்கம் ஆகும்! என்னே அன்புதான்,
ஆனுல்
இந்த வருமானம் வரவர இளைப்புப்
பெற்றதன் காரணம்: பெரியார் இயக்கமாம்!

★ ★ ★

அன்பர்கள் தம்நலம் அகற்றிப், பெருமாள்
இன்பம் ஒன்றையே எண்ணும் திறமே
வியப்புக் குரிய தாகும். விளம்புவேன் :—
"கோயிலில் தனியொரு குறிப்பிடம் உண்டு
குறிப்பிட மதனில் கோவிந்த னேபோல்
முறுக்கு மீசை முரடன் ஒருவன்
கட்டிலில் குந்திக் காத்தி ருப்பான்.
அவனே அவ்வூர் அரச ஞவான்
வட்டிலில் பண்ணியம் மலர்க்கை ஏந்தி
நாளுக் கொருத்தியாய்ப் பார்ப்பன நங்கை
வருவாள். வழக்கப் படியே நடக்கும்
பசகோ விந்தம் பசகோ விந்தம்!

★ ★ ★

பெருமாள் இவ்வாறு பெரமலூர்ப் பார்ப்பனர்க்(கு)
அருளிய செல்வம் அளவிடற் கரிதாம்.

★ ★ ★

எம்பெரு மான்செயல் இதுமட்டு மன்று.
கலிய பெருமாள் கட்டழகி மாரைத்
திருமணம் புரிந்து தேவடி யாரென
ஆக்கி ஆக்கி ஆக்கி இன்று
பாக்கி எவரும் இல்லாது செய்தார்.
உலகப் பற்றை ஒழிக்க எண்ணிய
கலிய பெருமாள் பெரமலூர்க் காசை
ஒட்ட உறிஞ்சி ஓட்டாண்டி ஆக்கிஞர்!
பட்டினிப் படையும், நீக்கிலா
வெட்டவெளியுமின்று பெரமலூர் என்பதே.

★ ★ ★

## தமிழன்நான் தலைகுனிவேனே

சிலம்பவேளான்காடு, சின்ன-இராமச்சந்திரன்.

உலகத்து மொழிகளனைத்திலும் தலையாய்த் திகழ்வது தமிழ்! உலகத்திலே உயர்ந்தவர்கள் உன்னதமானவர்கள் தமிழர்கள் !!

சிற்பம், சித்திரம், இலக்கியம், கொடைவளர்த்தவர்கள் பிறந்த நாடு. கலை வளர்த்தவர்கள் மொழி வளர்த்தவர்கள் அறம் வளர்த்தவர்கள் தமிழர்கள். மானம், வீரம், கற்பு, அன்பு வளர்த்த இனம் தமிழினம்.

உலக மொழிகளில் தமிழ் மொழியின் தரம் தனிச் சிறப்புள்ளது என்பதை யாரும் ஒப்புக்கொள்ளாமல் இருத்தல் இயலாத தொன்று.

உலக நூல்களில் — தமிழ் நூல் — திருவள்ளுவர் ஈன்ற திருக்குறள் உயர்ந்த நூல் என உலக அறிஞர்கள் ஒப்புக் கொண்ட உண்மையாகும். அவ்வாறெல்லாம் மொழி வழியில் — இனவழியில் குண வழியில் — அற வழியில் எல்லா வழிகளிலும் உயர்ந்தவர்கள் தமிழர்கள்.

இவ்வாறெல்லாம் உயர்ந்து வளர்ந்த தமிழரசர்கள் பிறர்கையை நம்பி பிறர் மொழிக்கு வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். வடவனுக்கும், பார்ப்பனனுக்கும் அடிமையாய் அடைந்துவிட்டோம்' என்பதில் என்ன அருத்தமிருக்கிறது? தன்னையே தான் ஆண்டு கொள்வதல்லவா சுதந்திரம். நம்மை நாம் ஆளவில்லையே! பிறருக்கல்லவா அடிமை ஆகிவிட்டோம்! என்ன அநியாயம்? ஏனிந்த அவகீதம்!

இருக்கின்ற நிலை! எண்ணுகின்ற நிலை எல்லாம் மறக்கும் நிலையில் இருக்கிறோம் நாம்! வடவனுக்கு அடிமையாய் இருப்பதைவிட வெள்ளையனுக்கு அடிமையாய் இருந்திருப்பது சாலச் சிறந்ததாகுமே! அவனிடமிருந்தாலாவது சுதந்திரம் இல்லை யென்று பேசுகின்ற நாம் சுகத்தையாவது பெற்றிருப்போமல்லவா? என்ன இழி நிலை! ஏன் இந்த நிலை என்று எண்ணிக்கொண்டு இருப்போமா?

போராட்டம் செய்து புதுஉலகு காணவேண்டாமா? சத்தியாக்கிரகம் செய்தால் கருணைநிறைந்த அரசாங்கம் - மக்களின் உள்ளக் கொதிப்பை அறிந்து தமிழ் நாட்டைப் பிரித்துக் கொடுத்தார்களா? நம்மை ஆளும் நயவஞ்சக நரிகள், நாம் செய்யும் போராட்டங்களும், உண்ணுநோன்புகளும் உயிர் விடுவதற்கென்றேயன்றி 'விடுதலை' அடையமுடியாதென்பது வெள்ளிடை மலையாகும்.

ஒருநாட்டில் வாழுகின்ற மனிதனுக்குப் பொருந்தியுள்ள அறிந்துள்ளவைகள்; ஒருசில மட்டுந்தான். "தன் நாட்டைத் தானே ஆள்வது; தன்மொழியே தன்னுயிர் என்பதல்லால் வேறென்ன இருக்க முடியும்? தாழ்ந்திடும் நிலையெனில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் நமக்கீந்த அறிவுரையை, அரியபாடலை படித்திருந்தும் பாராமுகமாய் உணர்விழந்து இருப்பதென்ன விந்தை?

"வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே!
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே!
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரத்தின் வீரமும் வெற்றியும் நீயே!
தாழ்ந்திடும் நிலையினில் உனைவிடுப் பேனே?
தமிழன் எந்நாளும் தலைகுனி வேனே?
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்;
தோன்றுடல் நீ:உயிர் நான்மறப் பேனே?
செந்தமிழே, உயிரே, நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக் களித்தேனே!
நைந்தாய் எனில்நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக் கெனில் எனக்குந்தானே!
முந்திய நாளினில் அறிவும் இலாது
மொய்த்தநம் மனிதராம் புதுப் புனல்மீது
செந்தாமரைக்காடு பூத்தது போலே,
செழித்தஎன் தமிழே ஒளியே வாழி"

புரட்சிக் கவிஞரின் இப்பொன் மொழியைக் கற்று ஒவ்வொரு உண்மைத் தமிழனும் உணர்ச்சி வயப்பட்டுக் கிளர்ச்சிப்பாதையில் இறங்கவேண்டும்!

மானமுள்ளவர்களே மறத்தமிழர்களே எழுச்சி பெறுங்கள்! எண்ணச் சிற்பிகளே எழும்புங்கள்! வெல்க தமிழகம்."

<★>

# பரிதிமாற்கலைஞரும் பைந்தமிழும்.

தகட்டூர், மா. இராமலிங்கம்.

பழந்தமிழக வரலாற்றைப் பற்றிக் கவலையுறாத நாடு. வரலாறு எழுதுவதையே கலையாக்கி வளர்த்த பெருமை மேலை நாடுகளுக்கே உரியது. மேல்நாட்டு மொழியியல் துறையைப் பார்க்கும்போது மொழி வரலாறு, இலக்கிய வரலாறு முதலியனவும் நாட்டு வரலாறும் பல்கிக் கிடக்கின்றன. தமிழகத்தில் வரலாறு எழுதுவதற்கு ஆள் இல்லை. வரலாறு எழுதிய இந்திய அறிஞர்களும் தென்னகத்தைப் புறக்கணித்தனர். வின்செண்ட் ஸ்மித் போன்ற வரலாற்று வல்லுனர்களும் தமிழகத்தை நோக்கித் தங்கள் பார்வையை அதிகம் செலுத்தத் தவறி விட்டனர். இந்தக் குறையை நீக்கத் தமிழறிஞர்கள் ஒரு சிலர் முயன்றனர். அம் முறையில் 'இலக்கிய வரலாறு' எழுதிய கா. சு. பிள்ளையும் 'தமிழ்வரலாறு' எழுதிய தஞ்சை K. S. சீனிவாசபிள்ளையும் 'தமிழ் மொழி வரலாறு' தீட்டிய 'பரிதிமாற் கலைஞரும்' போற்றத் தக்கவர்களேயாவர்.

சீரிளமைத் திறம் மிக்க செந்தமிழ் ஆரியம் போல் உலக வழக்கழியாது எண்டிசையும் புகழ் பரப்பி சிறந்து விளங்கியது. இடைக்காலத்தே புகுந்த பிறமொழிக் கலப்பினால் — குறிப்பாக வட மொழிக் கலப்பினால் - தமிழின் தரம் ஓரளவுக்குக் குறைந்தது. துவக்க காலத்திலேயே வடமொழிக் கலப்பைத் துண்டிக்க தமிழ்ப் புலவர்கள் ஏனோ தவறிவிட்டார்கள்! அவர்கள் செய்த அந்தக் குற்றத்தினால் பிற்காலத்தே தமிழ் மிகவும் இழிந்த நிலை எய்தியது.

இடைக்காலத்து உரைநூல்களும் செய்யுள் நூல்களும் வடமொழி கலந்தே எழுதப்பட்டன. அந்த நடைக்கு 'மணிப் பிரவாளம்' என்னும் பெயரையும் கொடுத்துப் போற்றத் தலைப்பட்டனர் மக்கள்.

'பால லோசன பானுவி லோசன
பரம லோசன பக்தச காயமா
சால காலத்ரி சூலக பாலஏ
கம்ப சாம்ப கடம்பவ னேசனே'!

என்ற முறையில் தமிழ்ச்செய்யுள் உருப்பெறலாயிற்று. தீந்தமிழ் நடையிலே பாடப்பட்டு செவிகளிலே தேனைப் பாய்ச்சிய பழந்தமிழ்ப் பாடல்கள் எங்கே? புரியாத முறையில் பிறமொழி கலந்து எழுதப்பட்ட இத்தகைய பாடல்கள் எங்கே? இதையெல்லாம் நோக்குழி வடமொழி ஆதிக்கத்தின் வலிமை எவ்வளவு இருந்திருக்கிறது என்பது தெள்ளிதிற் புலனாகிறது. இங்ஙனம் வடமொழிக் கலப்பு ஒருபால் வளர்ந்துகொண்டிருந்த போதிலும் தனித்தமிழ் நடையை உருவாக்கத் தமிழ்ப்பெருமக்கள் முயலாமல் இல்லை. அத்தகைய அறிஞர்களில் பரிதிமாற் கலைஞரும் ஒருவராகக் கருதப் படுகிறார்.

சூரிய நாராயண சாஸ்திரியார் என்ற தனது வடமொழிப் பெயரைப் 'பரிதிமாற் கலைஞர்' என்று மாற்றிவைத்துக்கொள்ளும் அளவுக்குத் தமிழ்ப்பற்று மிக்கவர் இவர். ஆனால் இந்த அளவுக்குத் தமிழ்ப் பற்றுடைய பரிதிமாற்கலைஞர் தாம் யாத்த நூல்களுக்கு 'மான விஜயம்' 'ரூபாவதி' 'கலாவதி' என்று வடமொழிப் பெயரே சூட்டியிருப்பது ஏன் என்று தெரியவில்லை. எவ்வளவுதான் தமிழ்ப்பற்று இருப்பினும் அவரும் "அவாள்" கூட்டத்தைச் சேர்ந்தவர்தாமே? பிறகென்ன, தம் "வேலை"யைக் காட்டாமலா இருப்பார்.

வடமொழிக் கலப்பு, தமிழை எவ்வள்வு தூரம் பாதித்திருக்கிறது என்பது திறனாய்வாளர்களின் கண்களுக்குத் தெரியாமல் போகாது. தமிழுக்கு இலக்கணம் எழுதவந்த ஓர் ஆசிரியனையே இந்த வடமொழிக் கலப்பு மயங்கச் செய்திருக்கிறது என்றால் பரிதிமாற் கலைஞர் எம்மாத்திரம்? அந்த இலக்கண ஆசிரியர் வேறுயாருமல்ல; 'இலக்கணக் கொத்துரை' தீட்டிய ஈசான தேசிகர் தாம் - தமிழ் இலக்கணத்துடன் வடமொழி இலக்கணத்தைக் கலந்தெழுதினார். அஃதோடன்றி,

"அன்றியும் தமிழ்நூற் களவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும்; தனித்தமிழ் உண்டோ?
அன்றியும் ஐந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவும் நாணுவர் அறிவுடை யோரே
ஆகையால் யானும் அதுவே அறிக;
வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக"

என்று தனது நூற்பாயிரத்தில் கூறுவராயினர்.

தனித்தமிழ் என்பதே கிடையாதாம். தமிழ் ஐந்தெழுத்தால் ஆன ஒரு படையாம். தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றுதானாம். இவ்வாறு ஈசான தேசிகர் கூறுவதற்குக் காரணம் அவர்

வாழ்ந்த அன்றைய சூழ்நிலை. அப்பொழுதும் 'மீனுக்கி அழகுகள்' தமிழகத்திலே இல்லாமல் இல்லை. 'சோறு' என்று சொன்னால் இழுக்கு, 'சாதம்' என்றால்தான் பெருமை என்று தமிழன் எண்ணிக்கொண்டிருந்த காலம் அது. வடமொழியிலிருந்துதான் தமிழ் பிறந்தது என்ற எண்ணம் மக்களது நெஞ்சிலே தோய்ந்து கிடந்த காலத்தில் ஈசான தேசிகர் அவ்வாறு எழுதியதில் நாம் வியப்பதற்கொன்றும் இல்லை. அந்த அளவுக்குத்தான் அவ்விலக்கண ஆசிரியரின் புலமையும் விரிந்து பரந்து விளங்கி இருக்கிறது.

ஈண்டு "தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும், குறியீடுகளும் வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும் உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம்புறமென்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சிவெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற்பெறப்படா" என்ற சிவஞானமுனிவரின் நினைவு கூர்தல் நலம்.

மேற்கூறிய ஈசான தேசிகரைப்போன்று பரிதிமாற்கலைஞரையும் காரணம் காட்டி மன்னித்துவிட முடியாது.

கூத்து மேடையிலே வேடமிட்டு நடிக்கிறான் ஒருவன்; அழகுபடப் பேசி, மெய்ப்பாடுதோன்ற நடித்து அவையோரின் பாராட்டுதல்களைப் பெறுகிறான். அநீதியைச் சாடி நீதிக்காகப் போராடும் நல்லவனின் பாத்திரத்தை அவன் ஏற்றிருக்கிறான். அவனது கலைத்திறமையைக்கண்ட மக்கள் போற்றிப் புகழ்கின்றனர். ஆனால் மேடையிலே நல்லவனாக நடித்தஅவன் சொந்த வாழ்க்கையிலே தீயவனாகவே இருக்கிறான். அப்பொழுது மக்கள் அவனைப்பற்றி என்ன நினைக்கமுடியும்?

இத்தகைய நடிகனின் நிலையில்தான் பரிதிமாற்கலைஞரும் நமக்குக் காட்சியளிக்கிறார். அவர் வடமொழிக் கலப்பை வெறுக்கிறார். வடமொழியால் தமிழ் அடைந்த தீமைகளை விளக்குகிறார். அவையெல்லாம் வெறும்'நடிப்பு'என்றுதான் நாம் நினைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இல்லாவிட்டால் வடமொழி கலந்து அவரே ஏன் எழுதுகிறார்?

அவர் எழுதிய தமிழ்மொழி வரலாற்றில் ஒரு பகுதியை எடுத்துக்காட்டாகக் காண்போம்.

"வடமேற்கே பல்லாயிரக் காவதத்திற்கு அப்புறமுள்ளதும், ஐரோப்பாக் கண்டத்தின் ஒரு பகுதியுமாகிய 'ஸ்காந்திநேவியம்' என்ற இடத்தினின்றும் ஆரியர் என்ற சாதியார் புறப்பட்டு நாலா பக்கங்களிலும் சென்று சேர்ந்தனர். அவ்வாரியருள் ஒருபிரிவினர் மத்திய ஆசியாவின் மேற்குப்பாகத்திலுள்ள 'துருக்கிஸ்தானம்' என்னும் இடத்தில் தங்கினர். இவ்விடந் தங்கிய ஆரியர்களே 'கைபர் கணவாய், வழியாக இந்தியாவிற் புகுந்தனர். அவர்கள் இவ்வாறு புகுந்தமை தமிழர்களது நன்மைக்கோ அன்றித் தீமைக்கோ? இதனை அறிவுடையார் எளிதில் உணர்ந்துகொள்வார்களாக"

(தமிழ்மொழியின் வரலாறு—பக்கம் உரு)

ஆரியர்களின் வருகையால் தமிழர் சீர்குலைந்தனர் என்று சொல்லாமற் சொல்லிய அவரே வடமொழிக் கலப்பை வெறுத்து எழுதுவதைப் பாருங்கள்.

"அத்துணையோடமையாது மணிப்பிரவாளம் என்றதோர் புதிய பாஷை வகுத்துவிட்டனர். அஃதாவது தென்மொழியும் வடமொழியும் சரிக்குச்சரி கலந்த பாஷையாம். மணியும் பவளமும் கலந்து கோத்ததோர் மாலை காட்சிக்கின்பம் பயக்குமென்ற போலி எண்ணமே இத்தகைய ஆபாச பாஷை வகுக்குமாறு தூண்டிற்று" (பக்கம், நங)

இதன்கண் சாதி, மத்திய, பாஷை முதலிய வடசொற்களைக் கலந்தே எழுதியிருக்கிறார். பாஷை என்றுதான் எழுதவேண்டுமா? 'மொழி' என்ற சொல் இல்லாமலா போய்விட்டது? பரிதிமாற்கலைஞருக்கு 'மொழி' என்ற சொல் இருக்கிறது என்பது தெரியாதா? தனித்தமிழிலே எழுதக்கூடிய ஆற்றல் இல்லாதவரா? இருப்பினும் அவருக்கு ஏன் 'பாஷை' என்றசொல்லிலே இத்தனைபாசமும் பரிவும்? எண்ணிப் பார்க்கவேண்டும் நாம்.

அது போகட்டும்! இலக்கணக் கொத்துடையாரின் கூற்றை இவர் கண்டித்து எழுதும்போது "ஆரிய சாஸ்திரத்தின் பயிற்சியும் சாஸ்திரக் கண்ணும் இல்லாத குறைவினால் எழுந்த பொருந்தாக் கூற்றுக்களாம் என்பது இவைகேட்டுப் பேரறிவாளராயினர் நகைத்து விடுப்பரென்பது நிச்சயம்" என்று குறிப்பிட்டுச் செல்கிறார்.

ஈசான தேசிகர் 'பாடை' என்று எழுதினார். அவரைக் கண்டிக்கும் இவரோ 'பாஷை' என்று எழுதுகிறார். இருவருக்கும் என்னதான் மாறுபாடு இருக்கிறது.

கூத்துமேடை நடிப்பு போன்று வட மொழிக்கலப்பை வெறுத்து எழுதுகிறார். நடிகன் சொந்த வாழ்க்கையிலே தீயவனாக இருப்பது போன்று இவரே வடமொழிகலந்து எழுதுகிறார். பரிதிமாற் கலைஞருக்கு ஏனோ அவ்வளவு 'காதல்'– வடமொழிமீது! இந்தக் காதலுக்குரிய காரணத்தைக் காணவேண்டும் நாம்.

புலமை நலம் சான்ற இவரைப் போன்ற தமிழ்ப் பேராசிரியப் பெரு மக்களே இவ்வளவுமுரண்பாடாக நடந்து கொண்டால் தமிழ்த்தாய் எப்படி வாழ முடியும்? தமிழின் நலத்திலே உண்மையில் இவர்களுக்குப் பரிவு இருந்தால் இப்படிச் செய்வார்களா? எனவேதான் இவர்கள் எல்லாம் தமிழை வளர்க்கவில்லை. தங்கள் பிழைப்புக்குக் கருவியாகத் தமிழைப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்றமுடிவுக்குவருகிறோம்நாம்.

பரிதிமாற் கலைஞர் தமிழ் வளர்த்த பேராசிரியரா? அல்ல தமிழால் வளர்ந்த பேராசிரியரா? தமிழர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்!

★ ★

## விற்பனையாளர் தேவை

**திண்டிவனம்**
**விழுப்புரம்**
**செங்கற்பட்டு**
**தாம்பரம்**
**விருத்தாசலம்**
**திண்டுக்கல்**
**விருதுநகர்**
**தென்காசி**

ஆகிய ஊர்களில் பொறுப்பும் நம்பிக்கையும் வாய்ந்த முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

—அமைச்சர்.

# காடு

தேவராசன் பி. ஏ. மேட்டூர்.

பாதை கொடியெனப்போம்! பாதத்தில் முள்துளைக்கும்
வாது முறிந்து வழியடைக்கும் — ஈது
பிறந்திருப்போர் வாழ்வைப் படுத்தியெதிர் நிற்கும்
செறிந்த துயர்தொகையோ செப்பு!

சுற்றுங் கிளைவிரித்துச் சூழ்ந்த மரங்களிலே
இற்றமரங் காற்றால் இழித்திருத்தல் — பற்றுமிடிக்(கு)
அஞ்சிஅருஞ் செல்வர் அடிப்பிடித்து வாழ்விரக்கும்!
பஞ்சைநிலை காட்டும் படம்!

வண்டிட்ட கண்வாய் வருங்காற் றிசைவிளக்க
நின்றமெலி மூங்கில் நிலைகாணின் — உண்டியிலா(து)
ஊர்இரக்கும் எண்ணற்றோர் ஒல்லிய கைகால்கள்
நேர்இருந்து காட்டும் நமக்கு!

வான முழுநிலவின் வெள்ளி யொளிப்பொழிவு
கான மரத்தடியில் கோலமிடல் — காணின்நல்
நாணுடைமை வேண்டியவர் நம்மிடையே தம்மிடையில்
பூணுடையின் கண்களே போன்று!

கரியும் கரிஎண்கும் கொல்புலியும் ஏறும்
நரியு(ம்)இரை தேடி, நா நீட்டித் – திரியும்!
அறியாமை, சாதிவெறி யாணவம், பஞ்சம்
வெறியேறி நம்மிடையே போல்!

★ ★

## செய்தியும் - வாழ்த்தும்!

கோவையில் பங்குனித் திங்கள் 30-ஆம் நாள் ஞாயிறன்று - புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில், கோவை தி. க. செயலாளர் க. அரங்கநாதன் அவர்கள் தம்பி மாரிமுத்துவுக்கும், காமாட்சிக்கும் திருந்திய முறையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. தலைவர் உரைக்குப்பின் "வாழ்க்கைத் துணைநலம்" என்னுந்தலைப்பில் திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாசலனார், புலவர் மருதவாணன் முதலான பலர் சொற்பெருக்காற்றினர்.

அதுபோது மணமக்களால் குயில் வளர்ச்சிக்கென 10 ரூபாய் நன்கொடையாக அளிக்கப்பட்டது பெற்றோம் – நன்றி! — மணமக்களுக்கு எங்களது நல்வாழ்த்துக்கள்.

—அமைச்சர்.

# ஈரோட்டுப்பாதை

ஆத்தூர், கு. கலியபெருமாள்.

அந்தப்பாதையில் நான் நடந்து கொண்டிருந்தேன். என்னைப் போன்றவர்களும் எத்தனையோ பேர் அந்தப்பாதையில் நடந்துகொண்டுதான் இருந்தனர் அவர்கள் அப்பாதையில் நிம்மதியாக நடந்தனரோஎன்னவோ, ஆனல் எனக்கு அப்பாதையில் நடக்க விருப்பம்கிடையாது. எத்தனையோமேடு பள்ளங்கள் ஓடை உடைப்புகள். காட்டாறுகள். களிமண் சதுப்புக்கள், குட்டைகள், மேலே கொசுக்கள் கூட பறந்து கொண்டிருந்தன. மூக்கை பிடித்துக் கொண்டாலும் மூச்சைத்தான் நிறுத்தலாமே ஒழிய நாற்றம் நீக்க முடியாத அளவுக்கு எதுவும் செய்யமுடியாது சகித்துக் கொண்டுதான் நடந்தேன் மற்றவர்கள் அதில் சாதாரணமாகத்தான் நடந்து கொண்டிருந்தனர். ஆனல் அங்கங்கே அப்பாதையில் பலசாவுகள் நடந்து கொண்டுதான் இருந்தன. மேட்டிலே விழுந்தோர் சிலர், பள்ளத்திலே பாய்ந்தோர் பலர். ஓடையிலே உருண்டோர் எத்தனையோ, கொசுக்கடியிலே கூட சிலர் கூண்டோடு மாண்டனர். அதுவும் தற்போது கரடி, சிங்கங்கள் கூட அப்பாதையில் நுழைந்து விட்டதாகக் கேள்வி. ஆனல் இத்தனைத் தொல்லையிலும் யாரும் சிந்திப்பதாகத்தெரியவில்லை. நடந்து கொண்டுதானிருந்தனர். ஆனல் எனக்கு எப்படியோ இருந்தது. சிந்திக்கத்தான் செய்தேன் அப்பாதையில் ஏற்பட்ட இன்னல் என்னை சிந்திக்கவைத்தது. சிந்தித்தேன் பலமுறை சிந்தித்தேன் — நடந்தேன்; எதிரில் நான் கண்டது நான் நடந்துவந்த பாதையை விட்டு ஒரு பாதை புதியதாக சென்றது. ஆச்சர்யமாகத்தானிருந்தது விறு விறென்று நடந்தேன் கவனித்தேன் பாதையின் முனையில் ஒரு பலகைத் தொங்கியது.

அதில் ஈரோட்டுப்பாதை என்று எழுதியிருந்தது. திரும்பத்திரும்பப் படித்தேன் அருகில் ஒரு தோழர் கருஞ்சட்டையுடன் நின்று கொண்டிந்தார். அவர் வருகின்றவர்களையும். போகின்றவர்களையும் பார்த்து ஏதேதோ கூறிக்கொண்டிருந்தார் வாருங்கள், வாருங்கள் ஈரோட்டுப்பாதைக்கு வாருங்கள் நாட்டிற்கோர் நல்ல பதை, சாதி, மத, பேத மற்ற சமத்துவப்பாதை வாருங்கள், தந்தை பெரியார் அழைக்கின்ருர் வாருங்கள். கூறிக்கொண்டேயிருந்தார். ஆனல் பாதையில் செல்லுவோரோ கவனிப்பதாகத் தெரியவில்லை. அந்தப் பாதையில் தான் அதிகம் சென்று கொண்டிருந்தனரே தவிற இப்பாதையில் ஏதோ ஆயிரத்திற் கொருவர் பத்தாயிரத்திற்கொருவர் திரும்பினர். நானும் திரும்பினேன். திரும்பித்தானே ஆகவேண்டும்! நான்தான் அப்பாதையில் பட்ட தொல்லையை அனுபவித்தவனுயிற்றே! திரும்பினேன் ஈரோட்டுப்பாதைக்கு! அணிந்தேன் கருஞ்சட்டையினை! அதுதான் இப்பாதையில் நடப்போருக்குச் சின்னமாகும் — கருஞ்சட்டையுடன் நடந்தேன்.

கருஞ்சட்டையுடன் நடந்த என்னை இல்லை, இல்லை, என் கைகளையாரோ பிடிப்பது போலிருந்தது திரும்பினேன். அத்தான் என்ருள் ஒருத்தி எத்தனை சத்தான வார்த்தை அது தித்தித்தது தேன்தமிழல்லவா. "ஏன்த்தான் என்னை விட்டு விட்டு வந்துட்டீங்க நான் வரக்கூடாதா உங்க; ளோடே தோளைப்பற்றினுள் என்ன வேல்விழி நீயா? எப்பொழுது வந்தாய்? எப்படி வந்தாய்? எங்கே உனது பெற்ருேர்கள்? ஆச்சர்யத்தோடு சொற்களை அடுக்கினேன் கேள்வியாக "அத்தான் அவர்களை விட்டுவிட்டு ஓடிவந்துவிட்டேன் நீங்களில்லாமல் நானு? அவர்கள் அந்தப்பாதையில் போகிருர்கள் வாருங்கள் அத்தான் நாம் இந்தப் பாதையிலேயே போவோம் நல்லவங்களுக்குத்தான் இதுபாதை. கெட்டவங்களுக்கு அதுதானே பாதை- பின்னல் அடைவார்கள் வாதை! இனி யாரும் நம்மை அசைக்க முடியாது வாருங்களத்தான்! எனக்கெஞ்சினுள்; கொஞ்சினுள்-கூட்டிச்சென்றேன் சின்ன வயதிலேயிருந்து என்னுடன் ஒன்று பட்டவளல்லவா?

நல்லபாதையிலே நாங்கள் செல்லும் வேளையில் "அடதுரோகிங்களா" என்ற குரல் கேட்டுத் திரும்பினேம் திகைத்தேன், வேல்விழியின் பெற்ருேர்கள் உற்ருர் உறவினர்கள் யாவரும் எங்களை முரைத்துப் பார்த்தனர். எங்களைப்பற்றி. எங்களிரு உள்ளங்களைப் பற்றி அவர்களுக்கெங்கே தெரியும்? தெரிந்துகொள்ளக்கூடிய அறிவு ஏது அவர்களுக்கு? இங்கே ஓடியாந்துட்டா உன்னை விட்டுவிடுவோமா? அவனுக்குத்தான் சாதியில்லை; மதம் இல்லை, சாமியில்லை! குலமில்லை! கோத்திரமில்ல! ஒண்ணுமில்லாத அன்னக்காவடிப்பயல் நீயுமா அப்படி? நமக்கு அது இல்லாம என்ன கூடும்? கருப்புச் சட்டைக்காரப்பயகூட நீ ஓடுறியா? வா, வேல்விழி என்று அவள் கையைப்பிடித்து வெடுக்கென்று இழுத்துப்போனர் அந்த முரட்டு மனிதர்; அவர்தான் வேல்விழியின் தந்தை.

ஐயா, ஐயா, வேண்டாமய்யா! வேல்விழியை விட்டுவிடுங்களய்யா! கெஞ்சினேன்; கேட்பதற்கு நாதி யில்லை. மிஞ்சினேன் அக்கூட்டத்தார் கொடுத்த உதைதான் மிச்சம் எனக்கு. "அத்தான் அத்தான்" ஒலி கேட்டது ஆனல் உ...

அத்தான்; அத்தான்! கண்டிப்பாய் நான் செத்து விடுவேன். உங்களைப் பிரிந்து நான் வாழவேமாட்டேன். நல்ல பாதையை ஈரோட்டுப்பாதையைவிட்டுப் பிரிக்கப்பட்ட நான் இனி ஒரு விஞடி கூடஉயிர் வாழ மாட்டேன். சுதந்திரத் தமிழகம் ஏன்கிடைக்காது? அதிலேதான் எனது கல்லறை அமைய வேண்டும்! அதற்குப் பாடுபடுவதே உங்கள் காதலின் முடிவாகட்டும் உங்கள் கடமை ......ஒலி தேய்ந்தது – ஒன்றும் காணேம்!

மீண்டும் நடந்தேன் எனக்குப் பின்ஞல் வந்ததோழர் என்னைக் கூப்பிட்டுச் சொன்ஞர் வேல்விழியின் உடலை அவளது பெற்ருேரும் உற்ருரும் நல்ல பாதையை விட்டு நச்சுப்பாதைக்குச் சுமந்து செல்லுவதாக: ஆம் கண்ணீர் விட்டேன் – காதலித்ததற்காக! கடமையைக் காத்தவளுக்காக! எதிரில் கருஞ் சட்டைப் படை தந்தை பெரியாரின் தலைமையில் இப்பொழுது நல்ல பாதையில் நடமாடும் கருப்புச் சட்டைப்படையிலோர் தொண்டன் நான் – கடமை வீரன். ஐயா கட்டளைக்குக் காத்து நிற்கின்றேன் கடமை யாற்று வதற்காக– அப்பொழுது தானே அவள் கல்லரை சுதந்திரத் தமிழகத்திலிருக்கிறேனென்று பெருமைப்படும்.

பெரியார் வாழ்க – சிறியார் வீழ்க!★


எதிர்பாருங்கள்!

"குயில்"

ஆண்டு மலர்

பிற விவரங்கள் பின்னர்


# குயிலே நீ கூவு

(புலவர், புதுமதியன்.)

தோப்பிற்குப் பாடகியே! தென்றலிளங் காற்றில்
தவழ்ந்துவரப் பண்கூட்டும் கோலவரிக் குயிலே!
'கூப்பிட்டுப் பாடுகிருய்! நாட்டிற்கு வாய்த்த
குறைமாற்றத் தமிழர்களை உணர்வூட்டு கின்ருய்!
ஆப்பிற்கும் பிளக்காத நெஞ்சுடையோர் உன்றன்
ஆணைக்குக் கட்டுண்டார்! ஒன்ருன நாட்டின்
காப்பிற்குப் படைசேர்க்கும் அணித்தலைவ ராவார்
கதைகூறிக் கொம்பின்மேல் குயிலேநீ கூவு!!

மாந்தோப்புக் குடும்பத்தில் மதிப்புள்ள பெண்ணே!
மனிதகுலம் சாதியெனும் சகதியிலே சென்று
சாய்ந்ததினைக் கண்டித்துப் பண்பாடு!; நெஞ்சில்
சமத்துவத்தை ஊட்டிடுவாய்!; இன்றிந்த நாடு
தாழ்ந்தநிலை போயழியத் தரணியிதன் மீது
தமிழர்நெறி தனையோதி முன்னேர்கள் இங்கே
வாழ்ந்தநெறி நாள்தோறும் வளருவதற் கான
வகைகூறிக் கொம்பின்மேல் குயிலேநீ கூவு!!

புள்ளியுடற் புள்ளினமே! இசைபாடும் நங்காய்!
புவிமீது தன்புகழை நாட்டியதென் ஞட்டைக்
கொள்ளைசெயும் வடக்கர்களின் கூத்தாட்ட மெல்லாம்
குலைந்தழியப் பண்பாடு!; தமிழுக்குத் தீங்காய்
மெள்ளமெள்ள இங்குவரும் இந்திச் சிறுக்கி
மென்னியிலே கால்வைத்துக் கொன்றழிக்கும் வீரம்
துள்ளிவர இன்னிசையில் புரட்சிக்கு வித்தாய்த்
தோன்றும்வகை க்கொம்பின்மேல் குயிலேநீ கூவு!!

பறவைகளின் பண்ணரசி! குளிர்தோப்பு மங்காய்!
பாய்கின்ற புலியாகத் தமிழர்க்கு வீரம்
பிறக்கும்வகை பண்பாடு தூங்குகின்ருர் இன்னும்!
பிற்போக்குப் பேயகலக் குரல்தூக்கிப் பாடு!
கறக்கின்ற மாடாஞர் தென்ஞட்டு மக்கள்
கலயத்துப் பால்கொண்டான் வடநாட்டுப் பார்ப்பான்!
மறங்கொண்ட தமிழர்க்கு வந்திங்கு சேர்ந்த
மாசொழியக் கொம்பின்மேல் குயிலேநீ கூவு!!

செம்மைநிறக் கண்ணழகி! 'கருமேனிப் பெண்ணே'
செந்தமிழர் ஊர்தோறும் பார்ப்பாரக் கும்பல்
நம்மையெல்லாம் ஏய்த்திங்கு நன்ருக வாழ
நாம்வாட லேனென்று நன்கிடித்துப் பாடு!
வெம்மையிலே நாம்புழுங்க வேற்ருனுக் காக
விசிறிதரல் கேடன்ருே? இந்நாட்டு மக்கள்
தம்மையெலாம் ஒன்ருக்கித் தமிழர்நாம் என்ற
தன்மானம் பொங்கியெழக் குயிலேநீ கூவு

# வெங்கொடுமைச் சாக்காட்டில்...!

இரா. சுந்தரம், ஓமலூர்.

பிச்சைக்கு வந்தவன் பெண்ணுக்கு மாப்பிள்ளை யானனும். அதுபோல நாடோடியாய் வாழ வந்த ஆரியர்கள் தமிழரை நாலாயிரம் சாதியாக்கி வாழ் கின்றனர். தமிழர்களின் உயர்வறியாப் பார்ப்பனர், தமிழர்களைச் சூத்திரர் என்றும் வேசிமக்கள்என்றும் இழிவாக மதிக்கின்றனர்,

அன்று சேரன் செங்குட்டுவன் வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்றான்; கனக விசயர்மீது கல்லேற்றினன். ஆம்! அன்று கல் சுமந்தான் வடவன். ஆனல் இன்று கால் சுமக்கிருன் தமிழன். வடநாட்டான் எப்படியோ தமிழன் தலைமீது கால் வைத்து விட்டான். இந்த நிலைமை இப்படியே இருக்க வேண்டுமா? வடநாட்டானுக்குத் தமிழன் வருடந்தோறும் அறுபது கோடிப் பணத்தைக் கொட்டிக் கும்பிட்டு வாழவேண்டுமா? இலங்கை யில் இன்னலுறும் தமிழரின் கண்ணீரைக் கண்டும், "அவர்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை" என்ற நேருவின் காலடியில் நெடுஞ்சாண் கடையாய் கிடந்துதான் வாழவேண்டுமா?

தமிழன் சற்றே தன்நிலைமையை எண்ணிப் பார்த்தால் தாழ்நிலையுற்றிருக்க மாட்டான். நிமிர்ந்து நெஞ்சைக் காட்டிய தமிழன் இன்று வயிற்றைக் காட்டுகின்ருன் 'பசிபசி' என்று. ஈட்டி எறிந்தாலும் இமைக்காது விழித்துப் பார்த்தத் தமிழனின் கண்கள்-இன்று கொட்டும் கண்ணீருக்குக் குறை வில்லை. வடவனே, வெட்டிய மரம்போன்று வீழ்ந்து விட்டான் தமிழன் என்று தட்டிப் பறிக்கின்ருன் தமிழனின் பணத்தை!

"தமிழனவது அயலனவது எல்லாம் வெறும் ஏட்டுச்சுரைக்காய்" இப்படி ஏனோ தானோ என்று பேசுவோர் ஏராளம்.

"தூக்கினன் கூர்வாள்; நோக்கினன் போர்க் களம்" என்று பெருமைபேசிய தமிழ்த்தாயின் வாய் இன்று "எழில்நலம் காட்டி எதிர்வந்தாளை ஏறெடுத் தும் பார்க்காத என்மகன், விழியால் வலைவீசித் தன்னை விலைபேசும் நடிகைக்குக்கூட மயங்கவில்லை; அவள் நிழலுக்கு மயங்கித் திரைப்படக் கொட்டகை யில் நிலையற்றுக் கிடக்கிருனே" என்று துன்புற்றுத் துடிதுடிப்பதும் "இதோ இன்னும் என்மகன் இருக் கிருன். ஐயாவின் அடுத்தப் போராட்டத்தைச் சொல்லுங்கள்" எனக் கூறும் புறநானூற்று வீரத் தாய்ப் பிறந்துள்ள வீரத்தமிழகம் நம்தாயகம்.

போர்க்களத்தில் இரத்தம் சிந்திய தமிழன் இன்று திரைப்படக் கொட்டகையில் மூட்டைப்பூச்சி களுக்கு இரத்தம் சிந்துகிருனே என்பதும் உண்மை தான். என்ருலும் "மறந்துவிடுங்கள் மானத்தை! மன்னிப்புக்கேளுங்கள் விட்டுவிடுகிறோம்" என்று சிறையதிகாரிகள் கூறியபொழுது, "இறப்பது எங்களுக்கு எளிது. அய்யோ! மானத்தை மறப்ப தென்பது மாமலையினும் பெரிதே! தமிழனுக்குத் தமிழனே மன்னிப்புக் கேட்டதில்லை தறுதலைகளே உங்களிடமா மன்னிப்புக் கேட்போம்" என்று சூளுரைத்த வீரர்களின் விளைநிலம் நமது தாயகம்.

அடிபணிந்தான் தமிழன் என்று ஆர்ப்பரிக்கும் வடவனை நொடிப்பொழுதில் நொறுக்கிவிடமுடியும் நம்மால். அகம் புறம் கண்டவர் நாம், அறமுணர்ந் தவர்நாம்; இறந்தாலும் இழிதொழிலை மேற்கொள் ளாதவர்நாம். பன்னூறு ஆண்டுகாலம் பொன் னேட்டில் புகழ்ப்பொறித்து வாழ்ந்த நம்மை அடக்கிவிடப் பார்க்கிருன் வடக்கன். உருண்டோடி விட்டது இரண்டாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து ஆளும் கொடுமை! ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்ட வடவர்க்கு நாமார்க்கும் அடிமை யல்லோம் என்று உணர்த்தும்நாள் இன்று. தமிழர் இனி தலையெடுக்க முடியாது அவர்கள் வீரமும் மானமும் வீழ்ந்துவிட்டது என்று மனப் பால் குடிக்கும் வடநாட்டுப் பார்ப்பனப் பனியாக் களுக்கு:

"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோளெங்கள் வெற்றித்தோள்கள்,
கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள்
ஊறுமுள்ளம் எங்கள்உள்ளம்;
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்
கின்றதமிழ் எங்களமுச்சாம்!"

என்ற, புரட்சிக்கவிஞரின் கவிதை வரிகளையே காணிக்கையாக்குகிறோம்!

---

## நினைவுறுத்துகிறோம்...!

இயற்பெயரோ, புனைபெயரோ இன்றி வெளியிடப்பெறும் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்படுபவையே.

—அமைச்சர்.

குயில்

Regd No. M. 7030.

முதல்பக்கத் தொடர்

# வருக நேருவே!

ஓரி னத்தை அதிலும் ஒண்தமிழ்ப்
பேரினத்தைப் பெரிதுகட் டழித்து
நும் அதிகார நுழையைப் பெருக்க
எண்ணுவது சரியா? இந்த வண்ணம்
எந்த அரசியல் தலைவ ரிடத்தில்
கண்டீர்? அல்லது கல்வி, அறிவு
ஒழுக்கம் என்பவற்றில் ஒன்று
நன்றெனச் சொல்லுமா இந்த நடத்தையை?

நாட்டு மக்களைப் பிரிவினில் நடத்தி
ஆட்சி நடத்தினான் ஆங்கிலன் என்றீர்
நீர்செயும் வேலை எப்படி? நினைத்திரா?
தமிழர் எடுத்த தமிழ அமைச்சரைத்
தமிழரி னின்று தடுத்தாட் கொண்டீர்;
அவர்களை எமக்குப் பகைமை ஆக்கினீர்
அவர்கள் கையால் அல்லல் இழைத்தீர்;
எத்தனை நாளைக் கிம்முறை செல்லும்?

நீரைப் பிரித்தால் நிலையிற் பிரியுமா?
அரிசியைப் பிடுங்கினீர்; அயலார்க் களித்தீர்
இதுவே சிறிது முற்றினால் போதுமே
தமிழினம் ஒன்றுபட் டும்மைத் தாழ்த்த!

வருக நேருவே வருக! வந்து -
அரியஎம் அமைச்சர் உள்ளத் துள்ளே
உம்முள் ளத்தையும் ஒட்டி, உள்ள
நிலைமையின் துடிப்பை நேரில் உணர்க.

தமிழர்க்குச் சாவு வருவதைத் தமிழரின்
அமைச்சர் ஒப்புவார் அல்லர்!
தமிழர்கள் அவர்கள்!! தமிழகம் வாழ்கவே.

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா, தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.